SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# AA1 பரீட்சை - ஜனவரி 2017

**(January 2017 Examination - AA1 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: AA13**

# வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல் (EBA)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA1 பரீட்சை – ஜனவரி 2017
## (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**குறுநோக்க தேர்வு வினாக்கள்**
**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

### வினா 1ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| வினா இலக்கம் | விடைகள் |
|---|---|
| 1.1 | 2 |
| 1.2 | 3 |
| 1.3 | 1 |
| 1.4 | 4 |
| 1.5 | 4 |
| 1.6 | 2 |
| 1.7 | 2 |
| 1.8 | 2 |
| 1.9 | 2 |
| 1.10 | 3 |
| 1.11 | உண்மை |
| 1.12 | பிழை |
| 1.13 | உண்மை |
| 1.14 | பிழை |
| 1.15 | பிழை |
| 1.16 | பாவனையை |
| 1.17 | உற்பத்தியாளர்களை |
| 1.18 | இறைவரிக் கொள்கை |
| 1.19 | ஒப்பீட்டு அனுகூலம் |
| 1.20 | குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு |

**பிரிவு *A* இன் நிறைவு**

**பகுதி - B**

**(04 கட்டாய வினாக்கள்)**
**நான்கு வினாக்களுக்கும் விடையளிக்க.**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

## வினா 2ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) i) ஒரு பொருளாதாரத்தில் முக்கிய பொருளாதார வளங்கள் பின்வருமாறு.
- நிலம் (இயற்கை மூலங்கள்)
- உழைப்பு (சரீர சம்பந்த மற்றும் மனநிலை சார்ந்த திறன்கள்)
- மூலதனம் (மனிதனால் உருவாக்கப்பட்ட மூலங்கள்)
- தொழில் முனைவோர்

**(2 புள்ளிகள்)**

ii) சந்தர்ப்பச் செலவு கோட்பாடு ஒரு பொருளாதார நடவெடிக்கையில் சிறந்த மாற்றமாக குறிக்கிறது. சந்தர்ப்பச் செலவின் உண்மைக் கருத்தானது முடிவெடுத்தலில் பணவியல்பு கொண்டதாக அல்லது இல்லாததாக இருக்கலாம்.
உ+ம் ˙ ஒருவர் சொந்த வியாபாரம் ஒன்றை தனது கூலி, மூலதனம் மற்றும் மற்றைய சொத்துக்களை கொண்டு தொடங்கியுள்ளார். இந்த வியாபாரத்தின் சந்தர்ப்பச் செலவானது வருமானங்களும் நன்மைகள் என்பன கூலியில் இருந்து உழைத்ததாகும்.

**(3 புள்ளிகள்)**

b) சந்தைப்படுத்தல் பொருளாதார முறையின் குணவியல்புகள்
- அனைத்து வளங்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தனியார் தனியார் நிறுவனத்திற்கு உரிமையானதாகும். இற்கு எந்தவித அரசாங்க ஈடுபாடும் அற்றது. (தனிப்பட்ட சொத்துக்களுக்கான உரிமை)
- சந்தைப் பொறிமுறை அல்லது விலைப் பொறிமுறை ஆனது வளங்கள் ஒதுக்கலின் பொது ஏற்படும் அடிப்படை பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.
- அதிகப்படியான தேர்வுச் சுதந்திரம் (கொள்வனவாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் தீர்மானம் எடுப்பதில் முழுச்சுதந்திரம் மற்றும் இறைமையைக் கொண்டிருத்தல்.
- போட்டித்தன்மையான சந்தைகள் எளிதில் கிடைக்கக் கூடியதன்மை.
- சுற்றுச் சூழலானது தனியார் கம்பனிகளினால் புறக்கணிக்கப்படல் (வெளிப்புறச் செலவு)
- வருமான விநியோக ஏற்றத்தாழ்வு இருத்தல்.
- பொருட்களின் விலையானது கேள்வி நிரம்பல் என்பவற்றின் இடைத்தொடர்பின் தாக்கத்தால் சந்தையினூடாக தீர்மானிக்கப்பப்படுகிறது.

**(5 புள்ளிகள்)**
**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 3ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) i)
- மத்திய வங்கி
- உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்
- விசேட உரிமம் பெற்ற வங்கிகள்
- நிதி நிறுவனங்கள்
- குத்தகைக் கம்பனிகள்
- நிதியியல் இடைத்தரகர்கள்

**(2 புள்ளிகள்)**

b) i) நாணயக் கொள்கை

நாணயக் கொள்கை என்பது பணத்தின் அளவை / கிடைக்கக்கூடிய தன்மையை மற்றும் கணக்கிற்குரிய விலையை(வட்டி வீதம்) மாற்றுவதற்கு பணத்தை நிர்வகிப்பவர்களால் எடுக்கப்படும் நடவடிக்கையாகும். இது மத்தியவங்கி மற்றும் பணத்தை நிர்வகிக்கும் நிர்வாகத்தால் பொருளாதாரத்தின் பணவழங்கல் மாற்றும் வட்டி வீதத்தினை கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கையை உள்ளடக்குகிறது.

நாணயக் கொள்கையானது பெரும் பொருளாதார இலக்குகளை அடையும் நோக்கத்துடன் முறைப்படுத்தப்பட்டு அமுலாக்கப்பட்டது. இது அளவுக் கட்டுப்பாடுகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டுகள் இரண்டையும் உள்ளடக்குகிறது.

**(4 புள்ளிகள்)**

ii)
- திறந்த சந்தைச் செயற்பாடுகள்
- சட்டரீதியான இருப்பு விகிதம்
- வங்கி வீதக் கொள்கை
- தார்மீக இணக்க வைக்கும் செயல்
- வர்த்தக வங்கி கடன்களுக்கான முதிர்வுக் காலத்தை நிர்ணயம் செய்தல்.
- மறு நிதியளித்தில் வசதிகளின் ஏற்பாடு
- தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டி விகிதத்தை நிர்ணயித்தல்.

**(4 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 4ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) பண நிரம்பல் என்பது குறிப்பிட்ட நேரத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு மாற்றீடு செய்ய பொருளாதாரத்தில் பொதுமக்களினால் வைத்திருக்கப்படும் பணம் அல்லது திரவ கருவிகள் இருப்பாகும்.

பண நிரம்பல் ஆனது பல்வேறு வைப்புக் கணக்குகளில் வைத்திருக்கப்படும் காசுகள், நாணயங்கள் மற்றும் மீதிகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம். பணவழங்கல் ஆனது மக்களால் வைத்திருக்கபபடும் பணத்தை மட்டுமே குறிக்கின்றது.

பண நிரம்பலை மத்திய வங்கி கட்டுப்படுத்துவதுடன் அது மற்றைய நிறுவனங்களுடைய தொடர்பை ஏற்படுத்துகிறது.

வெவ்வேறு நிறுவனங்கள் அதாவது வர்த்தக வங்கி மற்றும் மற்றைய நிதி நிறுவனங்களில் மக்கள் வைத்திருக்கும் நாணயம், தேவை வைப்பு, நேரம் மற்றும் சேமிப்பு வைப்புக்கள் போன்ற பல்வகைப்பட்ட பண உருவத்தை கொண்டதே பண நிரம்பலாகும்.
வட்டி வீதம் மற்றும் பெரும் பொருளாதார விதிகளை தீர்மானிக்கும் முக்கியமான / தொன்றாக பண நிரம்பல் விளங்குகிறது.

**(3 புள்ளிகள்)**

(b) i) பணவீக்கத்திற்கான முக்கிய காரணங்கள் கீழே கூறப்படுகிறது.

- தேவை அதிகரிப்பு விலையுயர்வு ( மொத்த தேவை அதிகரிப்பு)
- பணவீக்கல் செலவு (செலவு அதிகரிப்பு / மொத்த தேவையில் குறைவு)

**(2 புள்ளிகள்)**

ii) பணவீக்க அதிகரிப்பால் பொருளாதாரத்தில் ஏற்படும் விளைவுகள்.

- உண்மை வருமானம் மற்றும் மக்களின் கொள்வனவு சக்தியில் குறைதலும் மற்றும் வாழ்கைத் தரம் குறைவடைதலும்.
- நாட்டினுள் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரித்தால் மக்கள் மற்றும் வியாபாரிகள் வெளிநாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்ய நேரிடும் அதற்கான காரணம் இலாபகரம் என்பதாகும் இதன் விளைவாக கட்டண சமநிலையானது வெகுவாக பாதிக்கப்படும்.
- நாட்டினுள் உற்பத்தியின் ஊக்கம் கெடுக்கப்படுவதால் பொருளாதார வளர்ச்சியை நாடு அடையமுடியாது போகும்.
- தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் தங்களுடைய சம்பள அதிகரிப்பிற்காக கோரிக்கை விடுக்கும். இது வேலையில் பிரச்சனையை ஏற்படுத்தும்.
- நாட்டில் உற்பத்தி குறைவடையும் போது வேலை வாய்ப்பில் குறைவும் மற்றும் வேலைவாய்ப்பின்மையை அதிகரிக்கும்.
- வியாபாரத்தின் விலை அதிகரிப்பும், முதலீட்டில் குறைவும் ஏற்படும்.

**(5 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 5ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

( a) i. **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** **(ரூ. மில்லியன்)**

| | | |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி காரணிக் கிரய விலையில் | = | 3,250 |
| கூட்டுக : நேரில் வரிகள் | = | 175 |
| குறைக்க : மானியங்கள் | = | (125) |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **=** | **3,300** |

**(3 புள்ளிகள்)**

ii. **சந்தை விலையில் மொத்த தேசிய உற்பத்தி** **(ரூ. மில்லியன்)**

| | | |
|---|---|---|
| சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | = | 3,300 |
| கூட்டுக : நிகரக் காரணி வருமானம் - வெளிநாட்டிலிருந்து | = | 250 |
| **சந்தை விலையில் மொத்த தேசிய உற்பத்தி** | **=** | **3,550** |

**(2 புள்ளிகள்)**

iii. **சந்தை விலையில் நிகர தேசிய உற்பத்தி** **(ரூ. மில்லியன்)**

| | | |
|---|---|---|
| சந்தை விலையில் மொத்த தேசிய உற்பத்தி | = | 3,550 |
| குறைக்க : மூலதனத் தேய்மானம் | = | (150) |
| **சந்தை விலையில் நிகர தேசிய உற்பத்தி** | **=** | **3,400** |

**(1புள்ளி)**

b) பிரதான பேரினப் பொருளாதார நோக்கங்கள்

- உயர் மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி
- குறைந்த மற்றும் நிலையான பணவீக்கம்
- பூரண வேலைவாய்ப்பு
- மீதிக் கட்டணச் சமநிலை

**(4 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

aat SRI LANKA

**பிரிவு *B* இன் நிறைவு**

## பகுதி - C

**கட்டாய வினா.**
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

## வினா 6ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

A. a)

i) குறுகிய ஓட்ட உற்பத்தி என்பது நிலையான மற்றும் மாறுபடத்தக்க பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்யும் செயன்முறையாகும். குறுகிய ஓட்ட உற்பத்தியில் செயற்படும் நிறுவனங்கள் நிலையான காரணிகள் அதாவது கட்டிடங்கள், இயந்திரங்கள், தொழில்நுட்பம் என்பவற்றை மாற்றாது வைத்து மாறுபடக்கூடிய காரணங்கள் அதாவது மூலதனம் மற்றும் தொழிலாளர்களை அதிகமாகப் பயன்படுத்தி வெளியீட்டை அதிகரிக்கின்றது. குறுகிய ஓட்ட உற்பத்தியில் குறைந்தது ஒரு காரணியாவது நிலையாக இருக்க வேண்டும்.


நீண்ட ஓட்ட காலப்பகுதி என்பது நிறுவனமானது தனது அனைத்து உள்ளீடுகளையும் மாற்றக்கூடிய இயல்பைக் கொண்டிக்கும். இன்னொரு வகையில் கூறுவோமானால் அளவில் மாற்றம் அல்லது விற்பனையில் மாற்றம் என்பதாகும். நீண்ட ஓட்ட உற்பத்தியில் கீழ் அனைத்துக் காரணிகளும் வேறுபட்டவையாகும்.

**(4 புள்ளிகள்)**

ii) குறுகிய ஓட்டத்தில், தகுந்த போட்டியின் கீழுள்ள நிறுவனம் உற்பத்தியின் அளவில் அதிகரிப்பை ஏற்படுத்தாது மற்றும் புதிய நிறுவனங்கள் இவ்தொழில்துறைக்குள் உள்நுழையமாட்டாது. ஆகவே விலையானது மாற்றமடையாமல் தொடர்ந்து காணப்படும்.
இதனால் நிறுவனம் மிக அதிகளவு இலாபத்தை ஈட்டிக்கொள்ளும்.
இலாபமானது எப்போது எப்போது வெளியீட்டின் கூடுதலான ஒரு அலகின் உற்பத்தியின் விலையானது அவ்வெளியீட்டு அளவை விற்பனை செய்வதால் எடுக்கப்படும் மேலதிக வருவாய்க்கு ஈடாகின்றதோ அங்கு இலாபமானது அதிகரிக்கப்படுகிறது.

**MR=MC**

தகுந்த போட்டியுடைய கம்பனியானது, அதனது சராசரி வருவாய்க்கு ஏற்ப விலையில் அதனது அனைத்து வெளியீடுகளையும் விற்பனை செய்யும். ஆகவே இறுதிநிலை வருவாய் ஆனது சராசரி வருவாய்க்கும் பொருளின் விலைக்கும் சமமானதாகும். ஆகவே தேவை வளைவு சமாந்தரத்தை நோக்குகிறது.




இலாபத்தை அதிகபட்சமாக்கல் வெளியீட்டு மட்டம் Q1 அவ்விடத்தில் MR=MC

**(5 புள்ளிகள்)**

b. i.

| | | |
|---|---|---|
| Qd | = | 2,800 - 25p |
| Qs | = | -200 + 100p |
| Qd | = | Qs சமநிலை |
| 2,800 - 25p | = | -200 + 100p |
| 3,000 | = | 125p |
| 3000/125 | = | p |
| 24 | = | P |

**சமநிலை விலை - ரூ24/-**

**(3 புள்ளிகள்)**

ii.

| | | |
|---|---|---|
| P | = | 24 ஆனது Qd சமன்பாட்டிற்கு பதிலீடாக வருகிறது. |
| Qd | = | 2,800 - 25p |
| Qd | = | 2,800 - (25 x 24) |
| Qd | = | 2,800 - 600 |
| Qd | = | 2,200 |
| Qs | = | -200 + 100p |
| Qs | = | -200 + 100 x 24 |
| Qs | = | 2,200 |

**சமநிலை கணியம் 2,200**

**(2 புள்ளிகள்)**

B. **சர்வதேச வர்த்தகத்தின் அனுகூலங்கள்**

- **உற்பத்தி அதிகரித்தல்.**

  சுதந்திரமான வர்த்தகமானது நாடுகள் அவற்றிற்கு விசேடமான உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்து விசேடத்தன்மை அடைய அனுமதிக்கிறது.

- **அதிகபடியான வளப்பயன்பாடு**

  இவ் சர்வதேச வர்த்தகமானது நாடுகள் தங்களுடைய வளங்கள் உச்ச பயன்பாட்டை எடுத்துக்கொள்ள உதவுகிறது. ஒருநாடு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யாவிட்டால் அதன் வளங்கள் பயன்படுத்தப்படாமல் போகலாம். ஆகவே இது வளங்களின் விரயத்தை இல்லாமல்செய்ய உதவுகிறது.

- **நுகர்வோர் அடையும் நன்மைகள்**

  நுகர்வோர்கள் சர்வதேச வியாபாரத்தின் மூலம் உயர்தர பொருட்கள் மற்றும் சேவைகளை பயன்படுத்தி நன்மையடைகின்றனர்.

- **சர்வதேச உறவுகளை ஊக்குவித்தல்**

  சர்வதேச வியாபாரம் அமைதியை ஆதரிக்கிறது, நாடுகளுக்கிடையே நன்மதிப்பு மற்றும் பரஸ்பரம். நாடுகளின் பொருளாதார இணைச்சார்புகள் கலாச்சார உறவு நெருக்கத்திற்கு வழிவகுக்கிறது.

- **வர்த்தக ஏற்ற இறக்கத்தை குறைக்கிறது.**

  பெரிய விநியோகத்தர்கள் மற்றும் வரிவான தேவை சர்வதேச வர்த்தகத்தில் பெரிய சந்தை அளவு மூலம் வர்த்தக ஏற்ற இறக்கங்கள் குறைக்கிறது.

**(6 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**பிரிவு *C* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".
The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2017 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*